பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 103

12.10.2026

லஞ்சம் கேட்டு பெற்ற பில் கலெக்டர் கைது

புகார்தாரர் திருமதி.அன்னபூரணி, கரூர் மாவட்டம், காந்திகிராமம் தெற்குப் பகுதியில் வசித்து வருகிறார். புகார்தாரர் தனது தாயாருக்கு சொந்தமான புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கு வரி மதிப்பீடு செய்வதற்காக விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து வரி மதிப்பீட்டுப் பணித்தாளைத் தயாரித்துத் தருவதற்காக திரு.லோகேஷ்வரன், பில் கலெக்டர், கரூர் மாநகராட்சி மண்டல அலுவலகம், கரூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.3,000/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கரூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 12.10.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.லோகேஷ்வரன், பில் கலெக்டர் அவர்கள் ரூ.3,000/- லஞ்ச பணத்தை புகார்தாரரிடமிருந்து கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 103
12.10.2026

BILL COLLECTOR ARRESTED FOR BRIBE

The complainant, Tmt. Annapoorani, a resident of Gandhi Gramam South, Karur District, had applied for tax assessment of a newly constructed house belonging to her mother. Tr.Logeswaran, Bill Collector, Corporation Zonal Office, Karur district, demanded a bribe of Rs.3,000 from the complainant for preparing the tax assessment worksheet for her mother's newly constructed house. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Karur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (12.10.2026). During trap proceedings, Tr.Logeswaran, Bill Collector, demanded and accepted the bribe amount of Rs.3,000/- from the complainant. The accused was arrested and sent to judicial custody.